பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
04 10 2026 SUNDAY 06 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கடந்த 12 ஆண்டுகளில் நாடுமுழுவதும் கட்டமைப்பு வசதிகள் பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

2. ஆடுதுறை - கும்பகோணம் - சுந்தரப்பெருமாள்கோவில் இரட்டை ரயில்பாதை திட்டம், மக்களின் பயண வசதியை மேம்படுத்தும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. இடைத்தேர்தல் நடைபெறவுள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

4. திருப்பூர், ஈரோடு, சேலம், உட்பட 20 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய விளையாட்டு போட்டியில் இந்தியா 21 தங்கம் உள்ளிட்ட 85 பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 4வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

கடந்த 12 ஆண்டுகளில் நாடுமுழுவதும் கட்டமைப்பு வசதிகள் பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

தில்லியில் நேற்று நடைபெற்ற பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய அவர், 2014ஆம் ஆண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு அமைந்த பின்னர், நாட்டின் வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டதாக கூறினார்.

2026-27ஆம் நிதியாண்டில் முதலீட்டு செலவினங்களுக்காக 12 லட்சம் கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 12 ஆண்டுகளில் தேசிய நெடுஞ்சாலைகள் 61 சதவீதம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும், விமான நிலையங்களின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முக்கியமான துறைமுகங்களில் சரக்குகள் கையாளும் திறன் 60 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், 36 ஆயிரத்து 429 கிலோமீட்டர் தூரத்திற்கு புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் முத்ரா வங்கிக் கடன் திட்டத்தின் கீழ், 52 கோடி சிறு வணிகர்களுக்கு பிணையில்லாமல் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என்றும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

>>>>>><<<<<<<

ஆடுதுறை - கும்பகோணம் - சுந்தரப்பெருமாள் கோவில் இடையேயான இரட்டை ரயில்பாதை திட்டம், மக்களின் பயண வசதியை மேம்படுத்தும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஒற்றை ரயில் பாதையை இரட்டை வழித்தடமாக மாற்ற வேண்டும் என்ற தமது கோரிக்கையை ஏற்றுள்ள மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் மாநிலத்தின் ரயில்வே உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு உதவும் என்றும், ரயில் போக்குவரத்து திறனை மேம்படுத்துவதோடு, மாவட்டங்களுக்கு இடையேயான இணைப்பையும் மேலும் வலுப்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி முன்னுரிமை அளித்து நிறைவேற்றி வருவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<<

இடைத்தேர்தல் நடைபெறவுள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.இதையடுத்து, அரசியல் கட்சிகளின் தலைவர்கள், அந்த தொகுதிகளில் முகாமிட்டு இறுதிகட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மதுராந்தகம் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின், த.வெ.க. ஆட்சியில் நாளுக்கு நாள் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து வருவதாக குற்றம் சாட்டினார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஆவின் பால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதனிடையே, மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதியில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, த.வெ.க. அரசுக்கு ஆதரவளிக்கும் கூட்டணி கட்சிகளே அரசின் தவறான கொள்கைகளை விமர்சிக்கும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளதாக கூறினார்.

ஆட்சி பொறுப்பேற்று ஐந்து மாதங்களாகியும், த.வெ.க. அரசு அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலைஉயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

கடந்த திமுக ஆட்சிக்காலத்தில் உயர்த்தப்பட்ட சொத்துவரி உயர்வு, மின்கட்டணம் ஆகியவற்றை குறைப்பதாக வாக்குறுதி அளித்த த.வெ.க., அதை நிறைவேற்றவில்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

இந்நிலையில், இடைத்தேர்தல் நடைபெறவுள்ள மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

>>>>>><<<<<<<

தூத்துக்குடி மாவட்டம், குலசேகரபட்டிணம் முத்தாரம்மன் கோவில் தசரா திருவிழாவிற்காக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 150க்கும் மேற்பட்ட சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

இந்த திருவிழாவிற்கு வரும் பொதுமக்களின் வசதிக்காக குடிநீர், சுகாதார வசதிகளை செய்து தர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், தசரா திருவிழாவை முன்னிட்டு குலசேகரபட்டிணத்தில் இம்மாதம் 11ஆம் தேதி முதல் 20ஆம் தேதிவரை 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவலர்களை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக திருச்செந்தூர் கோட்டாட்சியர் திரு. கவுதம் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<<

நீலகிரி மாவட்டம், உதகை அரசு தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நேற்று தொடங்கியது.

காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலர் தொட்டிகள் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – சரவணன் - 45 Sec. )*

>>>>>><<<<<<<

பழம்பெரும் திரைப்பட இயக்குநர் சிங்கீதம் சீனிவாச ராவ் சென்னையில் நேற்று காலமானார். அவருக்கு வயது 94.

வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இயக்குநர், தயாரிப்பாளர், இசையமைப்பாளர், கதாசிரியர் என பன்முக வித்தகராக திகழ்ந்த சிங்கீதம் சீனிவாச ராவ், தமிழில் ராஜபார்வை, அபூர்வ சகோதரர்கள் உள்ளிட்ட ஏராளமான திரைப்படங்களை இயக்கியுள்ளார்.

அவரது மறைவுக்கு திரையுலகினரும், முக்கிய பிரமுகர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<<

தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை சுற்றியுள்ள லட்சத்தீவு பகுதிகளில் வளிமண்டல சுழற்சி நிலவுவதன் காரணமாக, கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் இன்று இடிமின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், ராணிப்பேட்டை உட்பட 20 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடிமின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை மாலை அல்லது இரவு நேரங்களில் ஒருசில பகுதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<<

இருவரிச் செய்திகள்

அமெரிக்காவின் பொருளாதார தடைகளை எதிர்கொள்ள புதிய அணுகுமுறையை ஈரான் வகுத்துள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு. Masoud Pezeshkian தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<<

மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகத்தின் சார்பில் Virginia-வில் ஒற்றுமை ஓட்டம் நடைபெற்றது.

>>>>>><<<<<<<

திரிபுராவில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 3 புள்ளி எட்டாக பதிவானது.

>>>>>><<<<<<

உலகப் புகழ்பெற்ற டார்ஜிலிங் மலை ரயில் பயணத்தை மேம்படுத்தும் வகையில் 146 ஆண்டுகள் பழமைவாய்ந்த Sukma ரயில் நிலையத்தில் சுற்றுலா பயணிகளுக்காக ரயில்வே பல்வேறு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருள்மிகு பொன் வரதராஜ பெருமாள் கோவிலில் 200 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வரும் பக்தர்கள் மாடு தாண்டும் பாரம்பரிய வழிபாடு நேற்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>>><<<<<<

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு - பழனி புறவழிச்சாலையில் காரில் கடத்தி வரப்பட்ட 120 கிலோ போதைப்பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட 38 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து ஆயிரத்து 495 மது பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

>>>>>><<<<<<

பள்ளி காலாண்டு தேர்வு விடுமுறை மற்றும் தொடர் விடுமுறை காரணமாக உதகமண்டலத்தில் நேற்று ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்ததால், நகரில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

>>>>>><<<<<<

சென்னை ராஜீவ்காந்தி அரசு பொதுமருத்துவமனைக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>>><<<<<<

சென்னை மாநகரில் ஆபத்தான முறையில் அதிவேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டி, சமூகவலைதளத்தில் பதிவிட்ட நபரை காவல்துறையினர் கைது செய்து, வாகனத்தை பறிமுதல் செய்தனர்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்தி

ஆசிய விளையாட்டு போட்டியில் இந்தியா 21 தங்கம் உள்ளிட்ட 85 பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 4வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இந்த போட்டியில் இந்தியா இதுவரை, 21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலம் என 85 பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>>>END<<<<<<<